
# மறைந்திருக்கும் சதி






ஆ.....சதீஸ் அண்ணா... இந்த முறை பெரிய லீவில் வந்திருக்கிறீர்கள் போல....
லீவு பெரிதோ இல்லையோ... சில நாட்கள் ஊரில் நிம்மதியாக ஓய்வெடுக்க கிடைத்தால் சரி ராதிகா...
கொங்க்ரீட் வாசம் வெறுத்துவிட்டது
தங்கச்சி எங்கு போகின்றீர்கள்?
தபாலகத்துக்கு வந்துவிட்டு வீடு திரும்புகிறேன்...
நீங்கள் வரும்வரை மாமி காத்துக்கொண்டிருக்கிறார்
ம்ம்ம்... அது வழமை தானே
உங்களின் ட்ரைனிங் எல்லாம் எப்படிப் போகுது?
நன்றாக நடைபெறுகிறது... அதல்ல... நீங்கள் தெளிவுபடுத்துகிறேன் என்று முன்பு சொன்ன விசயத்தைப்பற்றி கேட்க வேணும் அண்ணா...
அந்த மனித வியாபாரம்...?
அதென்ன தங்கச்சி...?
ஓ..... Human Trafficking பற்றியா...
உண்மையில் மனிதர்களை விற்க முடியுமா...?



ஆம்... மனிதர்கள் என்றால் வயதுவந்த பெண்கள், பெண் பிள்ளைகள்
ஆண் பிள்ளைகள், இளம் பராயத்தினர், வயதுவந்த ஆண்கள் என எல்லோரும்
அவர்களையும் விற்க முடியுமா...?
ஆம்... இவர்கள் எல்லோரையும் விற்பனை செய்வதில் ஈடுபடும் ஆட்கள் இருக்கின்றனர்.
இருந்தாலும் அண்ணா இவ்வாறு மனிதர்களை விற்பனை செய்ய முடியுமா?
எவ்விதத்திலும் முடியாது. அது ஒரு சட்ட விரோதச் செயல்.
அது எப்படி? சரி சரி... புரிகிறது...
என்ன...?
பெண்களையும் பெண் பிள்ளைகளையும் பாலியல் தொழிலில் ஈடுபடுத்தத்தானே விற்பனை செய்கி-ன்றார்கள்...?
அதற்கு மாத்திரமல்ல. பலவிதமான செயல்திட்டங்களில் கட்டாயத் தொழிலில் ஈடுபடுத்துவதற்காக...
அடிமைகளாகப் பணி புரிய... உடற் பாகங்களை அகற்றி விற்பனை செய்வதற்காக... பாலியல் ரீதியான வேறு சில முறைகேடான பயன்களைப் பெற்றுக்கொள்வதற்காக
அப்படியாயின் சட்ட விரோதமற்ற ஒரு சேவையில் ஈடுபடுத்துதல் தவறாக இருக்க முடியாதல்லவா...
இல்லை. நீங்கள் கூறுவது தவறு. ஏனென்றால்...
இங்கு ஈடுபடுத்தப்படும் தொழிலானது சட்டபூர்வமானதா அல்லது இல்லையா என்பதை அல்ல கருத்தில் கொள்ளவேண்டும்...
தொழிலில் ஈடுபடுபவர் விருப்பத்துடன் அதில் ஈடுபடுகின்றாரா என்பதைத் தான் கருத்தில் எடுக்க வேண்டும்.





உதாரணமாக அம்பாந்தோட்டையில் உள்ள கமலாவை பலவந்தமாக அழைத்துச் செல்லும் சிறிபால, புத்தளத்தில் கருவாடு காயவைக்கும் வாடியொன்றில் கருவாடு காயவைப்பதற்காக அந்தக் கருவாட்டு வாடி உரிமையாளருக்கு விற்பனை செய்கின்றார்...
கருவாட்டு வாடியின் உரிமையாளர் கமலாவிற்கு உணவு, உடை எல்லாவற்றையும் கொடுக்கின்றார். ஆனால் கமலாவை வாடியைவிட்டு வெளியில் செல்ல அனுமதிப்பதில்லை...
கமலா அச்சம் காரண-மாக அங்கு வேலை செய்கின்றார். கருவாடு காயவைத்தல் சட்ட விரோதமான விடயமாக இல்லாவிட்டாலும்...
ஒருவரை பலவந்தமாக தடுத்துவைப்பது சட்ட விரோத செயலாகும்.
அப்படியானால் கமலா குற்றம் ஒன்றைப் புரிந்துள்ளாரா?
கமலா அல்ல. சிறிபாலவும் கருவாட்டு வாடியின் உரிமையாளரும் குற்றமொன்றைப் புரிந்துள்ளார்கள்.
கமலாதான் இவ்விடத்தில் பாதிக்கப்பட்டவர்.
அந்தக் குற்றவியல் தவறு என்ன?
மனித வியாபாரம் (Trafficking) எனும் குற்றம்.
இலங்கை தண்டனைச் சட்டக் கோவையில் 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின்
360 (இ) பிரிவிற்கு அமைவாக இது பாரதூரமானதொரு குற்றமாகும்.
அந்தத் தவறுக்கு என்ன தண்டனை அண்ணா கிடைக்கும்?



2 வருடம் முதல் 20 வருடம் வரையிலான சிறைத்தண்டனை-க்கு மேலதிகமாக தண்டப் பணமும் விதிக்கப்படலாம்...
பாதிக்கப்பட்டவர் ஒரு சிறுவராயின் தண்டனை மேலும் கடுமையாகலாம்...
அப்போது குறைந்தது 3 ஆண்டு கால சிறைத் தண்டனையும்...
தண்டப் பணமும் விதிக்கபடலாம். 20 வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனையும் வழங்கப்படலாம்......
அப்படியென்றால் அண்ணா பலவந்தமாக விற்பனை செய்தால் மாத்திரம்தான் அது குற்றச் செயலாகக் கருதப்படுகின்றதா?
இல்லை... இல்லை. பலவந்தம் என்பது அதில் ஒரு சந்தர்ப்பம் மாத்திரமே...
இப்படித்தான் தங்கச்சி......
எவரேனும் ஒருவர் பலாத்காரமாகவோ.... மோசடிமிக்க முறையிலோ.... ஏமாற்றியோ.... தூண்டுதலை ஏற்படுத்தியோ....
ஒருவரின் இன்னலின் போது தகாத பயனை பெற்றுக்கொள்ள முயன்றாலும் அதுவும் இந்தக் குற்றச் செயலாகவே கருதப்படும்
இப்படி யோசிங்க....
உயர்தரப் பரீட்சை பெறுபேற்றை எதிர்பார்த்திருக்கும் யமுனா....
வீட்டு கஷ்டம் காரணமாக ஒரு தொழிலை தேடுகின்றாள்.



கொழும்புக்கு அடிக்கடி சென்றுவரும் ஊரில் இருக்கும் குமார் என்பவர் கொழும்பில் ஆயுர்வேத நிலையமொன்றின் கவுண்டரில் ஒரு தொழிலை பெற்றுத்தருவதாக வாக்குறுதியளிக்கின்றார்....
அதன்படி யமுனா தனது தாயாரையும் கூட்டிக்கொண்டு குமாருடன் அந்த தொழில் நிலையத்திற்கு செல்கின்றாள்.
AYURVEDA CLINIC
ஆயுர்வேத நிலையத்திலிருக்கும் லிசீ மிஸ் அது ஆயுர்வேத நிலையமென்று கூறி யமுனாவை அங்கேயே தங்க வைத்துக்கொள்கின்றார்.
பிறகுதான் அது ஆண்களுக்கு பணத்திற்கு உடலை பிடித்துவிடும் நிலையம் என்றும்
அவ்விடத்திற்கு வருபவர்களுக்கு தகாத முறையில் பாலியல் இன்பத்தை தருவதற்கு நேரிடுகின்றது எனவும் யமுனாவிற்கு தெரியவருகின்றது.
குமாரின் வேலை இவ்வாறான இடங்களுக்கு கிராமத்து பெண்களை விற்பனை செய்வதாகும்.


இச்சந்தர்ப்பத்தில் யமுனா ஒரு மோசடிக்கு ஆளாகியுள்ளார். அதற்கமைவாக குமாரும் லிசீ மிஸ்சும்
மனித வியாபாரம் (Trafficking) எனும் குற்றத்தைப் புரிந்துள்ளார்கள்.
ஆனாலும் யமுனா வயதுவந்த ஒருவர் தானே. 18 வயது பூர்த்தியானவர் தானே...
ஆம். இங்கு அதுவல்ல விடயம். வயது வந்த ஒருவராக இருந்தாலும்...
மோசடிக்கு ஆளாக முடியும். மோசடிக்கு உள்ளாகியுள்ளார் என்பது நிரூபிக்கப்பட வேண்டும்.
ஷ்ஷ்ஷ்ஷ்ஷ்...!!!!
இரண்டு பேரும் பெரிய விஷயமொன்றை பேசிக் கொண்டிருக்கிறீர்கள் போல?
ஆ.... ஜகன் அண்ணா
அண்ணா
அண்ணாவை சந்தித்ததும் நல்லதற்கு தான். நாங்களும் விரைவில் வீடு போய்ச்சேரலாம்.
இனி நீங்கள் பேசிக்கொண்டிருந்த விடயத்தைப்பற்றி எனக்கும் சொல்லுங்களேன்.
மனித விற்பனை பற்றி உங்களுக்குத் தெரியுமா?
கொஞ்சம் தெரியும்... தம்பிக்கு தெரியும் தானே? சொல்லுங்கள் கேட்போம்...
இதுதான் விடயம். நான் ஒரு உதாரணத்துடன் சொல்கிறேன்...
அல்பிரட் எனும் நபர் கஞ்சாச் செடிகளை தோட்டத்தில் பயிரிடுகிறார்...



அங்கு வேலைக்கு ஆட்களை ஏற்பாடுசெய்து கொடுப்பது ரவி எனும் காடையன்... முரளி கிராமத்தைச் சேர்ந்த ஒரு அப்பாவி மனிதன
ரவி சிவாவுடன் பேசிவிட்டு சிவாவின் வாகனத்தில் முரளியை பலவந்தமாக ஏற்றிக்கொண்டு போய்
அல்பிரட்டுக்கு ஒரு இலட்சம் ரூபாவிற்கு விற்றுவிடுகின்றான்.
திரும்பிச் செல்வதற்கு வழி தெரியாத முரளி தோட்டத்தில் கஞ்சா செடிகளை நட்டுக்கொண்டு அங்கு இருக்கின்றார்....
இங்கு சிவா செய்தது குற்றமாகும்... ரவி செய்யும் குற்றத்தை அறிந்த நிலையில் அவனுக்கு போக்குவரத்து வசதியை வழங்குகின்றார்...
அப்படி நோக்குகையில் சிவாவும் மனித வியாபாரம் குற்றத்தை புரிந்துள்ளார்...
ஆனாலும் ரவி சிவாவிடமிருந்து சிவா அறியாத வகையில் வாகனத்தை வாடகைக்கு பெற்றிருப்பான் எனில்...
அச்சந்தர்ப்பத்தில் சிவா குற்றம் புரிந்தவராக மாட்டார்...
...சிவா அதைப்பற்றி எதுவும் அறிந்திரு-க்கவில்லை என்பதை...
...நிரூபிக்க வேண்டிய பொறுப்பு சிவாவுக்கு இருக்கின்றது.
தவறியேனும் சிவா அனைத்து விடயங்களையும் அறிந்திருந்தார் என்று ரவி சொல்லிவிட்டால் சிவா வீண் கஷ்டத்தில் விழுந்துவிடுவார்....
நீதி மன்றங்களில் ஏறி இறங்கவும் சிறைச்சாலைக்குச் செல்லவும் நேரிடலாம். சட்டத்தரணிகளுக்கு பணம் செலுத்தி...
...தான் சுத்தவாளி என்பதை நிரூபிக்க நேரிடும்...


ஏற்கனவே குறிப்பிடப்பட்ட உதாரணத்தில் உள்ள அல்பிரட் குற்றம் புரிந்தவர் தானே?
நிச்சயமாக. விலை கொடுத்து வாங்குதல் மற்றும் ஆட்சேர்த்தல் ஆகிய இரண்டு சந்தர்ப்பங்களும் அதில் இருக்கின்றனவல்லவா....
அண்ணா.. இரகசியமாக தடுத்து வைத்துக்கொள்வது என்பது எவ்வாறு நிகழ முடியும்?
சிலர் சிறுவர்களை கடத்திச் சென்று....
பயங்கரவாத அமைப்புகளுக்கு விற்றுவிட்டதும் அப்பிள்ளைகளை....
....தடுத்து வைத்திருந்து யுத்தப்பயிற்சியை வழங்கி போரில் ஈடுபடுத்துவார்கள். அவ்வாறான நிகழ்வை உதாரணமாகக் கூற முடியும்.
மனித வியாபாரம் எனும் குற்றச்செயல் இடம்பெறுவதற்கு ஒருவரை பணத்திற்காக மட்டுமே விற்பனை செய்ய வேண்டுமா?
இல்லை. கட்டாயமாக அப்படி இருக்க வேண்டுமென்று இல்லை அண்ணன். கொஞ்சம் வண்டியை நிறுத்துங்களேன்...
இதற்கு நான் சில உதாரணங்களை கூறுகின்றேன். அப்பொழுது உங்களுக்கு நன்றாக புரியும்.


நகரத்தில் வசிக்கும் கதிரவேல் கிராமத்தில் வசிக்கும் நீலன் என்பவரிடம் தனது வீட்டில் வேலை செய்வதற்கு கிராமத்திலிருந்து ஒரு வேலைக்காரப் பையனைக் கூட்டிக்கொண்டு வந்து கொடுத்தால்...
தனது பெயரில் உள்ள வயற்காணியை நீலனின் பெயரில் எழுதி வைப்பதாகக் கூறுகிறார்...
அதற்கேற்ப சங்கர் எனும் 17 வயது சிறுவனையும் அவனது பெற்றோரையும் ஏமாற்றும் நீலன்
சங்கரை கதிரவேலிடம் கூட்டிக்கொண்டு வந்து கொடுத்துவிட்டு காணியை தனது பெயரில் எழுதிக் கொள்கின்றார்.
வெளிநாட்டு நிறுவனங்களுடன் பரிமாற்றங்களைச் செய்யும் டயஸ் என்பவரிடம் ஒரு வெளிநாட்டவர் ஒருவர் உடல்நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ள சில நோயாளிகளுக்கு....
....சிறுநீரகங்கள் தேவையாக இருப்பதால்
பணிப்பெண்களாக வேலைக்கு அமர்த்துவதாகக் கூறி 10 பெண்களை வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்குமாறும் அதற்கு பிரதியுபகாரமாக...
டயஸ் மற்றும் அவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு வெளிநாட்டு பிரஜாவுரிமையைப் பெற்றுத் தர முடியுமெனவும் கூறுகின்றார். அதற்கமைவாக டயஸ் பெண்களை ஏமாற்றி வெளிநாட்டுக்கு அனுப்பிவைக்கின்றார்.
இரகசியமாக விபச்சார விடுதியொன்றை நடாத்தும் நிர்மலா என்பவர் வெளிநாட்டிலிருக்கும் தொழிலதிபரான அல்பிரட் என்பவருடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்கின்றார்...


அது என்னவெனில், வெளிநாட்டுப் பெண்களையும் இலங்கைப் பெண்களையும் தமது வியாபார நடவடிக்கைகளுக்காக பரிமாறிக்கொள்வதாகும்...
அப்பெண்களுக்கு வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பைப் பெற்றுத்தருவதாக ஏமாற்றி அவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகும்.
அடுத்தவர் காந்தன் எனும் பிரபல தொலைக்காட்சி நடிகர். நாடகத்தில் நடிப்பதற்கு வாய்ப்புத் தருவதாகக் கூறி கிராமத்துப் பெண்களை ஏமாற்றிக் அழைத்துவந்து பயிற்சி பட்டறைகளை நடாத்துவதைப் போல அவர்களை ஏமாற்றி தங்க வைத்துக்கெ-ாள்வார்....
பிறகு அப்பெண்களை பணத்திற்கு விற்பதற்கு இணையத்தளம் வாயிலாக விளம்பரம் செய்வதற்கு இரகசியமாகத் திட்டமிடுவார்.
லயனல் என்பவர் பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர். பிரபல ரியாலிட்டி நிகழ்ச்சி ஒன்றைக் காண்பித்து பிள்ளைகளை ஒன்று திரட்டி பயிற்சிச் செயலமர்வுகளை நடாத்துவதைப் போல பாசாங்கு செய்து அவர்களை ஏமாற்றி தங்கவைத்து....
அப்பிள்ளைகளை இணையத்தளம் வழியாக பிரபல்யப்படுத்துகிறார். லயனலிற்கு அவரின் நண்பியாகிய அமீஷா இதற்கு உதவுகிறார். அவர் அந்த இணையத்தளத்தில்....
சம்பந்தப்பட்ட விளம்பரங்களை மேலும் பகிரங்கப்படுத்தும் நோக்கில் பல்வேறு சமூகத் தளங்களில் அதனை மேலும் பிரபல்யப்படுத்துகின்றார்.



தொலைக்காட்சி நாடகத்தில் நடிப்பதற்கு புது நடிகர்களை தெரிவு செய்வதற்கான பயிற்சி பட்டறை நடாத்துவதைப் போல இளைஞர்களை ஏமாற்றி தங்க வைத்துக்கொள்ளும் விதுர...
இப்பெண்களை பணத்திற்கு விற்பதற்கு இணையத்தளம் வாயிலாக விளம்பரம் செய்கிறான். இணையத்தளம் ஊடாக வருகின்ற கோரிக்கைகளுக்கு ஏற்ப தெரிவுசெய்யப்படுகின்ற பெண்களை...
தொலைக்காட்சி நாடகத்தில் நடிப்பதற்கு வாய்ப்பு தருவதாக...
ஏமாற்றி பல பாலியல் செயற்பாடுகளில் ஈடுபடுத்துகிறான்....
போலியான நடிப்புக்கூடம் ஒன்றை பழைய கட்டிடமொன்றில் உருவாக்கியுள்ளான்...
இவற்றிற்கு அருள் என்பவன் உதவி செய்கிறான்.
அநாதைகள் இல்லமொன்றின் சிறுவர்களை வெளிநாட்டவர்களுக்கு விற்கும் நோக்கில் அதன் பராமரிப்பாளர் லுசியாவை தூண்டுவதற்காக ரொட்ரிகோ என்பவன் லுசியாவுக்கு...
அதி சொகுசு மோட்டார் வாகனமொன்றை வழங்குகின்றான்.
மகிழ்ச்சியுற்ற லுசியா சிறுவர்களின் புகைப்படைங்களை சமூகத் தளங்களில் வெளியிடுவதற்கு ரொட்ரிகோவிற்கு வழங்க முடிவுசெய்கிறார்.


வயோதிபத்திலிருக்கும் சுமனா கடைகளுக்கு காலை உணவு விற்று வரும் வருமானத்தில் வாழ்பவள். அவள் தனியாக கிராமத்தின் பன்சலைக்கு சொந்தமான காணியில் குடிசையொன்றில் வாழ்ந்து வருகின்றாள்.
டெனிசன் என்பவன் சுமனாவிற்கு மூக்குக் கண்ணாடியொன்றை வாங்கித்தருவதாக வாக்குறுதியளித்து
அவளை கொழும்பிற்கு அழைத்து வந்து சாந்த எனும் ஹோட்டல் உரிமையாளரிடம் ஒப்படைக்கின்றான்.
HOTEL
அதற்காக சாந்தவிடமிருந்து டெனிசனிற்கு மாதாந்தம் 10,000 ரூபா கிடைத்தது.
சுமனாவிற்கு தங்குவதற்கு ஒரு இடம் கிடைத்தாலும் தினந்தோறும் ஹோட்டலில் சமைப்பதற்கும் பீங்கான் கோப்பைகளை கழுவுவதற்கும் நேர்கின்றது...
பௌர்ணமி தினங்களில் சில் அனுட்டானத்தில் ஈடுபட்டு கிராமத்தில் இருப்பதற்கு சுமனா விருப்பினாலும் கிராமத்திற்குச் செல்வதற்கு இயலாத நிலையில் அவ்விடத்திலேயே வாழ நேர்கின்றது
மேற்படி உதாரணங்களில் வரும் சிறிபால, குமார், லிசீ, ரவி, டயஸ், நிர்மலா, லயனல், விதுர, அமீஷா, அருள், ரொட்ரிகோ, லுசியா, சாந்த மற்றும் டெனிசன் ஆகியோர் மனித வியாபாரம் எனும் (Trafficking) குற்றத்தைப் புரிகின்ற ஆட்களாக சட்டத்தினால் இனங்காணப்படுகின்றனர்.
அப்படியென்றால் தம்பி, பெற்றோர் தம் பிள்ளைகளை இப்படி விற்பனை செய்ய முடியுமா?


எவ்விதத்திலும் முடியாது. பெற்றோருக்கோ அல்லது பிள்ளையொன்றின் பாதுகாவலருக்கோ அல்லது பாடசாலை ஆசிரியர்களுக்கோ அல்லது அதிபருக்கோ
அல்லது அநாதை இல்லத்தின் நிர்வாகிக்கோ அல்லது விடுதியொன்றின் நிர்வாகிக்கோ அல்லது நிறுவனமொன்றின் தலைவருக்கோ அல்லது
எந்தவொரு நபருக்கும் அவ்வாறு செய்வதற்கு சட்டரீதியான அதிகாரம் இல்லை.
அதாவது பெற்றோர் அதைச் செய்தாலும் தண்டனை கிடைக்குமா?
நிச்சயமாக. பெற்றோர் என்பதற்காக எவ்வித மன்னிப்பும் கிடைக்காது. பெற்றோருக்கு எதிராகக்கூட சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.
சரி. ஒருவரை ஏமாற்றி கூட்டிவந்து ஏதாவது ஒரு தொழிலுக்காக விற்பனை செய்கின்றார்கள்.
சம்பந்தப்பட்ட நபரும் சுய விருப்பத்துடனே சேர்ந்தால்
அவ்வாறு ஒருவர் விருப்பத்துடன் சேர்ந்தார் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு...
நிறுவனத்தின் உரிமையாளருக்கும் விற்பனை செய்தவருக்கும் அல்லாவிடின் ஆட்சேர்ப்பு செய்த நபருக்கும் உள்ளது. அதை நிரூபிப்பது கட்டாயமாகும்...
நிரூபிக்காவிடில், தண்டனைச் சட்டக் கோவையின் 360 ஆம் பிரிவின் கீழ் வரும் குற்றச் செயல்களுக்கு பிடியாணை இல்லாமல் கைது செய்ய முடியும்...
பிணை வழங்கப்பட மாட்டது. மத்தியஸ்தம் செய்யவும் முடியாது...
ஆகவே, இத்தகைய குற்றச்சாட்டுக்கு ஆளாகும் ஒருவர் விசாரணை நிறைவடையும் வரை சிறையிலடைக்கப்பட முடியும்...


அது மட்டுமல்ல பிணை வழங்கப்படவும் மாட்டாது. குற்றமற்றவர் என்பதை நிரூபிப்பதற்காக...
சட்டத்தரணிகளின் சேவையை பெற்றுக்கொள்ள நேரிடலாம்... சாட்சிகள் தேவைப்படும். இலகுவானதாக அமையாது...
மற்றைய விடயம் என்னவெனில் பாதிப்புற்றவர் சிறுவராக இருந்தால் சம்மதம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
அதாவது ஒரு சிறுவரை ஏமாற்றி தொழிலில் ஈடுபடுத்தினால்....
அப்பிள்ளையின் சம்மதத்துடன்தான் இந்த தொழிலில் ஈடுபட்டார் என்று நிரூபித்தாலும் பயன் ஏதும் இல்லை என்று கூறுகின்றீர்களா?
மிகவும் சரி. பிள்ளையின் சம்மதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் குற்றம் சுமத்தப்பட்டவர்களை குற்றவாளிகள் என கருத சம்மதம் என்ற விடயம் அவசியமில்லை.
அதாவது பாதிப்புற்றவர் 18 வயதுக்கு குறைந்தவராயின் சம்மதம் எனும் விடயத்தை நீதிமன்றம் கருத்திற் கொள்வதில்லை.
மனித வியாபாரம் (Trafficking) எனும் குற்றம் சமூகத்தில் இடம்பெற காரணம் என்ன?
பல காரணங்கள் கருத்தில் கொள்ளப்படலாம். முதலில்...
பிரதானமாக சமூகத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு இல்லாமை...
இவ்விடத்தில் நம் எல்லோருக்கும் ஒரு பொறுப்பிருக்கின்றது. பெற்றோர், வயதுவந்தோர், ஆசிரியர்கள், அரச அதிகாரிகள், மதத் தலைவர்கள் உட்பட முழு சமூகமும்....
விழிப்புணர்வுடன் ஒருவரையொருவர் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்க-ளாயின்...
இவ்விதமான குற்றச் சம்பவங்களைத் தவிர்த்திட முடியும்
இரண்டாவது காரணி வறுமையுடன் தொடர்புபட்டுள்ள நிர்க்கதி நிலை...
பெற்றோர்கூட பிள்ளைகளை விற்பனை செய்யும் நிலை இதற்கு சிறந்த உதாரணமாகும்...
பணம் அனைத்தையும் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணியாகும்போது குறிப்பாக பிள்ளைகளை தவறுகளுக்கு தூண்டுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கின்றது.




## உதவிகளைப் பெறுவதற்கு

| | |
|---|---|
| பொலிஸ் | - 119 |
| சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக நிவாரண பணியகம் | - 0112 444 444 |
| இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் | - 1989 |
| புலம்பெயர்தலுக்கான சர்வதேச அமைப்பு | - 0766 588 688 |
| மனித விற்பனை, ஆட்கடத்தல் மற்றும் கடல்வழி குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு | - 011 251 4374 |
| மனித விற்பனைக்கு எதிரான தேசிய செயலணி (www.nahttf.gov.lk) | - 076 844 7700 |
| தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை | - 1929 |

கதை ஆக்கம்: சட்டத்தரணி மேஜர் சதுன் குணவர்தன
பாதுகாப்பு அமைச்சு

ஓவியம்: வில்டன் ராஜபக்ஷ

IOM
UN MIGRATION